படிவம் - B

[விதி 3(4)னை பார்க்கவும்]

திட்ட மேம்பாட்டாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நபரால் கையொப்பமிட்ட வாக்குமூலத்துடன் இணைந்த பிரகடனம்

பிரகடன அறிவிப்பு

-----------------------------------------------எனும் உத்தேசத்திட்டத்தின் மேம்பாட்டாளர் திரு/திருவாளர்கள்--------------------------------------------(ன்) பிரகடன அறிவிப்பு

உத்தேசித்துள்ள திட்ட மேம்பாட்டாளராகிய நான்/நாங்கள் கீழ்க்கண்டவாறு இதன் மூலம் உணர்வுபூர்வமாக அறிவிக்கின்றேன்/றோம்.

1) திட்டம் அமையவுள்ள நிலத்தின் சட்டபூர்வமான உரிமை மேம்பாட்டாளராகிய என்னிடம்/எங்களிடம் உள்ளது.

அல்லது

திட்டம் அமையவுள்ள நிலத்தின் உரிமை, இத்திட்டத்திற்கான என்னுடன்/எங்களுடன் உண்டான கூட்டு ஒப்பந்தத்தில்/உடனுழைப்பு ஒப்பந்தத்தில்/மேம்பாட்டு ஒப்பந்தத்தில் மற்றும் வேறு ஏதேனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள ---------------------------------------என்பவருக்கு நிலத்தின் உரிமை உள்ளது.

அல்லது

இத்திட்டம் அமையவுள்ள நிலத்தின் உரிமையாளருக்கும் மேம்பாட்டாளருக்கும் இடையே இந்நிலத்தின் சட்டப்படி செல்லத்தக்க உரிமை மூலம் தொடர்பான ஒப்பந்தத்தின் முறையாக சான்றளிக்கப்பட்ட நகல் இணைக்கப்பட்டுள்ளது.

2) இத்திட்டம் அமையவுள்ள நிலம் எந்தவித வில்லங்களுக்கும் உட்படவில்லை

அல்லது

இத்திட்டம் அமையவுள்ள நிலத்தின் மீது -------------------------------------------- போன்ற ஏதேனும் உரிமை, உரிமை மூலம், பாத்தியதை, அல்லது இந்த நிலத்தினுள் அல்லது நிலத்தின் மேல் எவர் பெயரிலாவது வில்லங்கங்கள் உள்ளன.

3. இத்திட்டமானது என்னால்/திட்ட மேம்பாட்டாளரால் --------------------- கால அளவில் முடிக்கப்பெறும்.

4. (என்னால்/திட்ட மேம்பாட்டாளரால்), ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து இத்திட்ட மேம்பாட்டிற்காக பெறப்படும் எழுபது சதவீத தொகை, இத்திட்டத்திற்கான கட்டிட செலவு மற்றும் நிலத்திற்கான விலை ஆகிய செலவுகளை ஈடுகட்டும் விதத்தில் ஏதேனும் ரிசர்வ் வங்கியால் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியில் தனி கணக்கில் வரவு செய்யப்பட்டு பராமரிக்கப்படவேண்டும்.

5. அவ்வாறு தனிக்கணக்கில் வரவு வைக்கப்படும் எழுபது சதவீத தொகையானது (திட்ட செலவினத்திற்காக) உரிய பொறியாளர், கட்டிட கலைவல்லுநர் மற்றும் அங்கீகாரமுள்ள பட்டய கணக்காளர் அவர்களிடமிருந்து வழங்கிய சான்றிதழை ஒப்படைத்ததன் பேரில் எடுத்துக் கொள்ளலாம்.

6. மேற்கூறியவாறு வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட பணம் உரிய முறையில் இத்திட்டத்திற்குத்தான் செலவனது என்றும், அவ்வாறு எடுக்கப்பட்டட பணம் கட்டிட வேலை நிறைவு பெறும் விகிதத்தில்தான் எடுக்கப்பட்டது என்றும், உரிய பட்டய கணக்காளரால் சரிபார்க்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டின் நிறைவிற்குப் பின்னர் ஆறு மாதத்திற்குள் திட்ட மேம்பாட்டாளர்களின் நிறுவனத்தின் கணக்குகள் தணிக்கை செய்து, அதனுடன் சான்றிட்ட கணக்கு விவரவுரை தாக்கல் செய்யப்படும் என்று பிரகடனம் செய்கின்றேன்.

7. நான்/திட்ட மேம்பாட்டாளரார் இத்திட்டத்திற்கான ஒப்புதகளை உரிய குழுமத்திடமிருந்து உரிய கால வரைக்குள் பெறுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

8. கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை சட்டம் 2016–ன் கீழுள்ள விதிகளிலும் மற்றும் ஒழுங்குமுறை விதிகளிலும் கூறப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

9. நான்/திட்ட மேம்பாட்டாளர், எந்தவொரு காரணத்திற்காகவும், எந்தவொரு ஒதுக்கீட்டாளருக்கும், அடுக்குமனை, கட்டிடமனை மற்றும் கட்டிட ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனையுடன் செயல்படமாட்டேன்.

வாக்குமூலம் அளிப்பவர்

உறுதிமொழி

மேலே என்னால் கூறப்பட்ட பிரகடனத்துடன் இணைந்த வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மையானதாகவும் சரியானதாகவும் உள்ளது என்றும், வேறு சங்கதிகள் எதையும் மறைக்கவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

----------------------ஆண்டு ----------------------நாளில் என்னால் உறுதி யளிக்கப்பட்டது.

வாக்குமூலம் அளிப்பவர்